**செய்தி வெளியீடு எண்: 775** **நாள்: 26.12.12**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

<u>மாண்புமிகு முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகை திட்டம்</u>

ஆண்டுதோறும் 12ஆம் வகுப்பு (+2) பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தமிழை ஒரு பாடமாகக் கொண்டு பயின்று தொடர்ந்து கல்வி பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த முதல் ஆயிரம் மாணவர்கள் மற்றும் முதல் ஆயிரம் மாணவிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. +2 படிப்பினைத் தொடர்ந்து அல்லது ஓர் ஆண்டு இடைவெளிக்கு பின்னர் மேல்படிப்பு பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு இவ்வாண்டு முதல், ஆண்டு ஒன்றுக்கு ரூ.3000/– வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படும். 2012ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச மதிப்பெண்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | மதிப்பெண்கள் | | |
|---|---|---|---|
| ஆண்டு | மாணவர் | : | மாணவியர் |
| 2012 | 1069 | : | 1082 |

2011–12ஆம் கல்வி ஆண்டிற்கு முந்தைய ஆண்டுகளில் முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகையினை பெற்று தொடர்ந்து புதுப்பிக்கும் மாணவர்கள் நிதியாண்டு 2012–2013 முதல் ரூ.3000/– பெறலாம்.

2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தகுதி வாய்ந்த மாணவ / மாணவியர் மட்டும் தங்களது 12ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ் மற்றும் மேல் படிப்புக்கான மதிப்பெண் பட்டியல் நகல்களுடன் தங்கள் கல்லூரி அமைந்துள்ள மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு தங்கள் கல்லூரி மூலம் விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**